<u>வெளியேற்றுதல் (Evacuation Committee) குழு</u>

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை: டாக்டர். வி.ஜெயசந்திர பானுரெட்டி, இ.ஆ.ப.,

ந.க. 22387/2020/பே.மே. நாள்:12.09.2020

பொருள்: பேரிடர் மேலாண்மை - வடகிழக்குப் பருவமழை 2020 - கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழையின் பொருட்டு வருவாய் கோட்ட அளவில் வெளியேற்றுதல் குழு நியமனம் செய்து ஆணையிடுதல்.

பார்வை: முதன்மை செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வடகிழக்கு பருவமழை-2020 முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான சுற்றறிக்கை Rc.No. N.C.I (4)/1875/2020, நாள்: 26.08.2020.

---------

<u>ஆணை:</u>

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் எதிர்வரும் வடகிழக்குப் பருவமழை காலத்தில் பேரிடர் நிகழ்வுகளின்போது பொது மக்களை பாதுகாப்பாக பேரிடர் நிகழ்வு பகுதியிலிருந்து வெளியேற்றி பாதுகாப்பான பகுதிக்கு கொண்டு செல்லும் பொருட்டு வெளியேற்றுதல் (Evacuation Committee) குழு நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

1. வருவாய் கோட்ட அலுவலர், கிருஷ்ணகிரி / ஓசூர்.
2. மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள், கிருஷ்ணகிரி.
3. உதவி இயக்குநர், மீன்வளம், கிருஷ்ணகிரி.
4. உதவி செயற்பொறியாளர், பொதுப் பணித்துறை (நீ.ஆ.அ), கிருஷ்ணகிரி / ஓசூர் / ஊத்தங்கரை.
5. இணை இயக்குநர் (நலப் பணிகள்), கிருஷ்ணகிரி.
6. துணை இயக்குநர் (சுகாரதாரப் பணிகள்), கிருஷ்ணகிரி.
7. மண்டல இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்பு), கிருஷ்ணகிரி.
8. மாவட்ட வன அலுவலர், கிருஷ்ணகிரி.
9. வன உயிரின காப்பாளர், வன உயிரின காப்பகம், மத்திகிரி, ஓசூர்.
10. அனைத்து காவல் துணை கண்காணிப்பாளர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம்.
11. ஏரியா கமாண்டன்ட், ஊர்காவல்படை, கிருஷ்ணகிரி
12. கோட்ட பொறியாளர், நெடுஞ்சாலைகள் கோட்டம், கிருஷ்ணகிரி
13. கோட்ட பொறியாளர், நெடுஞ்சாலைகள்(கிராம சாலைகள்), தருமபுரி
14. அனைத்து வருவாய் வட்டாட்சியர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம்.
15. அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம்.
16. வட்டார போக்குவரத்து அலுவலர், கிருஷ்ணகிரி / ஓசூர்.
17. கோட்ட மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், கிருஷ்ணகிரி / ஓசூர்.
18. கிராம நிர்வாக அலுவலர் மற்றும் ஊராட்சி செயலர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

i. வருவாய் கோட்ட அளவில் வருவாய் கோட்ட அலுவலர் கோட்ட பேரிடர் மேலாண்மை அலுவலராகவும், வெளியேற்றுதல் குழுவின் தலைவராகவும் செயல்படவேண்டும். தமது கோட்டத்திற்குட்பட்ட வட்டார அளவிலான மண்டல குழுக்களின் பல்துறை அலுவலர்களையும் ஒருங்கிணைத்து வெளியேற்றுதல் பணிகளை மேற்கொள்ளவேண்டும்.

. . . 2 . . .

ii. மேற்கண்ட குழு உறுப்பினர்கள் பேரிடர் பணிகளுக்கு தேவையான படகுகள், பரிசல்கள், வாகனங்கள், கயிறுகள், மணல் மூட்டைகள், சவுக்கு கட்டைகள், மர அறுவை இயந்திரங்கள், JCB வாகனங்கள் மற்றும் மீட்பு பணிகளுக்குத் தேவையான சாதனங்கள் அவற்றின் இருப்பிடம் மற்றும் உரிமையாளர்கள் முகவரி, தொடர்பு எண் ஆகியவற்றை தயார் நிலையில் வைத்திருக்கவேண்டும்.

iii. வெள்ள பாதிப்புகளின்போது மீட்பு பணிகளுக்காக கிராம அளவில் நீச்சல் பயிற்சி பெற்றவர்களின் விவரங்களை தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

iv. முதலுதவி மருந்துகள், ஆம்புலன்ஸ்கள், மருத்துவ உபகரணங்கள், ஊசிகள், மருந்துகள் ஆக்சிஜன் சிலிண்டர்கள் ஆகியவற்றை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

v. மீட்பு பணிக்காக பயன்படும் வகையில் போக்குவரத்து வாகனங்கள் தயார் நிலையில் வைக்க வேண்டும்.

vi. கிராம அளவில் உள்ள பள்ளிக் கூடங்கள், கல்யாண மண்டபங்கள், சமுதாயக் கூடங்கள், திரையரங்குகள், கோயில் மண்டபங்கள் மற்றும் அவற்றிற்கான பொறுப்பாளர் விபரங்கள் மற்றும் அந்த கட்டிடங்களின் சாவி வைத்திருப்போர் விவரங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

vii. தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

viii. பேரிடர் நிகழ்வு பகுதிகளிலிருந்து பாதுகாப்பான இடத்திற்கு மக்களை கொண்டு செல்ல மாற்று பாதை திட்டம் வகுத்து செயலபட வேண்டும்.

ix. நிகழ்வுகள் குறித்து உண்மையான, தெளிவான அறிக்கையை உடனுக்குடன் பொறுப்பு அலுவலர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

/ உண்மை நகல் /

(ஒம்/-) வி.ஜெயசந்திர பானுரெட்டி,
மாவட்ட ஆட்சியர்,
கிருஷ்ணகிரி.

மாவட்ட ஆட்சியருக்காக
கிருஷ்ணகிரி

பெறுதல்

14-9-2020

சம்மந்தப்பட்ட அலுவலர்கள். (மின்னஞ்சல் வாயிலாக)
(அலுவலகத் தலைவர்கள் தங்களின் சார்நிலை அலுவலர்கள் / பணியாளர்களுக்கு உத்தரவு நகலை சார்வு செய்யவேண்டும்)

நகல்: காவல் கண்காணிப்பாளர், கிருஷ்ணகிரி,

நகல்: திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிருஷ்ணகிரி.

நகல் : செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை (நீ.ஆ.து), தர்மபுரி,

நகல் : மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), கிருஷ்ணகிரி,

நகல் : மாவட்ட ஆட்சியரின் நேர்முக எழுத்தர் மேஜைக்கு,

நகல் : மாவட்ட வருவாய் அலுவலரின் நேர்முக எழுத்தர் மேஜைக்கு.

நகல் : முதன்மை செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-600 005 - தகவலுக்காக அனுப்பப்படுகிறது.